(4) கவன ஈர்ப்புகள்.

[(அ) கல்லணைக் கால்வாய் மூலம் சில பகுதிகள் பாசனம் பெறுதது குறித்து.]

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"தஞ்சை மாவட்டத்தில் கல்லணைக் கால்வாய் பாசனம் பெறும் மன்னார்குடி தாலுகாவில் திருமக்கோட்டை பகுதிகளும் மன்னார்குடி மேற்புறமுள்ள பகுதிகளும் இதுவரை பாசனம் பெறுததால் எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை குறித்து".

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, திருமக்கோட்டை பகுதிகளுக்கும் மன்னார்குடி மேற்புறப் பகுதிகளுக்கும் 15—7—1978-லிருந்து பாசன நீர் வழங்கப்பட்டு வருகிறது. திருமக்கோட்டை பகுதிகளுக்குத் தேவையான நீர் தொடர்ந்து விடப்பட்டு வருகிறது. ஏறக்குறைய பாதிக்கு மேற்பட்ட பரப்பில் நாற்று நடவு வேலை முடிக்கப்பட்டு விட்டது. எஞ்சியுள்ள பகுதிகளில் நடவுவேலை தொடர்ந்து நடைபெறு கின்றது.

மன்னார்குடி மேற்புறப் பகுதிகளுக்குத் தொடக்கத்திலிருந்தே தேவையான அளவுக்கு மேலாகவே தொடர்ந்து தண்ணீர் விடப்பட்டு வருகின்றது. 90 சதவிகிதப் பரப்பில் நடவு முடிந்துவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, குறிப்பாகத் தலைப்பில் அதிகமாகத் தண்ணீர் விடப் பட்டாலும் கூட அந்தப் பாசனப் பகுதி மிகவும் நீண்டிருப்பதால் குறிப்பாக உள்ளிக்கோட்டை, திருமக்கோட்டை போன்ற பகுதி களில் கால்வாய் அதிக அகலம் இல்லாததன் விளைவாகத் தண்ணீர் அதிகமாகச் சென்று பாயாமல் விவசாயிகள் மிகவும் சிரம்படு கிறார்கள். இன்றைக்கு வேளாண்மைத் துறையும் பாசனத் துறையும் இணைக்கப்பட்டு ஒரே அமைச்சரிடத்தில் இருக்கிறது.

இது சரியானதுதான். ஏனென்றால் வேளாண்மைத் துறை அமைச்சர் விதை விடுங்கள் என்று சொல்வார், பாசனத்துறை அமைச்சர் தண்ணீர் விடுவதை நிறுத்துங்கள் என்று சொல்வார். அந்தமாதிரி நிலைமைகள் இல்லாமல் இரண்டு துறைகளும் ஒரே அமைச்சரிடத்தில் இருக்கின்றன. இது நல்ல முறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி: இது தண்ணீர்ப் பிரச்னை. அமைச்சரவர்கள், இந்தக் கல்லணைக் கால்வாய், கல்லணை விரிவாக்கக் கால்வாய் ஆகிய இரண்டையும் பரிசீலித்துத் தேவையான அளவிற்குத் தண்ணீர் செல்லும் வகையில் அந்த வாய்க்கால்களை விரிவாக்கவோ அல்லது உயர்த்தவோ நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள பாசன திட்டப்படி 'டெயில் என்ட் அக்ரிகல்சுரிஸ்டஸ்', கடைக்கோடி பகுதியிலே இருக்கக்கூடிய பாசன வசதியைப் பெறுகின்ற விவசாயப் பெருங்குடி மக்களும் தண்ணீரைப் பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு தண்ணீர் விடப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் சொல்வதைப் போல் கடைக்கோடி பகுதியிலே உள்ள விவசாயிகளுக்குத் தண்ணீர் வரவில்லையென்ற நிலைமை கூடாது என்பதற்காகத்தான் சீரமைக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அதோடு, சீரமைப்பது தவிர, தண்ணீரைக் கடைக்கோடி பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[(ஆ) சோன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர் மரண சம்பவம் குறித்து.]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திருவாளர்கள் கு. ரமணி, ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, ஒ. சுப்பிரமணியன், கே. கந்தசாமி, ஏ. ஆர். மாரிமுத்து, செ சதாசிவம், மு. அம்பிகாபதி, பொ. உத்திராபதி, சின்ன